

Vol.29 | No. 4 | April 2025
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

# THE CALL TO SERVE



VOCATION

"It is about making God's dream come true, the great vision of fraternity that Jesus cherished when He prayed to the Father 'that they may all be one'." - Pope Francis



Tailoring Machine Distribution,
March 5, 2025, Virudhunagar



Tailoring Machine Distribution,
March 5, 2025, Kayathar



Women's Day Celebration, March 8, 2025,
KKSSS, Kalluvilai

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 No :4 APRIL 2025



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 08 |
| மறைக்கல்வி | 09 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 15 |
| இல்வாழ்வு இயக்கம் | 18 |
| வின்செண்ட்-தே-பவுல் சபை | 20 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 22 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 25 |
| மறைமாவட்ட செய்திகள் | 26 |
| மறைவட்ட செய்திகள் | 31 |
| தென்காசி மறைத்தள செய்திகள் | 38 |
| MONTHLY AGENDA - APRIL 2025 | 40 |
| BISHOP'S ENGAGEMENTS | 43 |

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. S.M. Edwinson**

**Fr. Antony Thakidiyel**

**Mr. D. Iyathurai**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Mary Jency V.M**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/168/2025**

**Dear Readers,** **31 March 2025**

Greetings and prayerful wishes from Bishop's House, Thuckalay!

In this circular letter, I wish to share with you some reflections on our priestly vocation and ministry in light of Jesus, the Good Shepherd. This meditation is intended to renew our priestly commitment and deepen our understanding of what it means to be shepherds after the heart of Christ in our contemporary context.

The image of the shepherd is one of the most ancient and powerful symbols of God's relationship with His people. In the Old Testament, God is frequently portrayed as the shepherd of Israel (Psalm 23, Ezekiel 34). In the New Testament, Jesus explicitly identifies Himself as the Good Shepherd who knows His sheep cares for them, protects them, and ultimately lays down His life for them. This powerful image has significant implications for us who have been called to share in Christ's shepherding ministry.

Our vocation to the priesthood begins not with our decision but with Christ's choice. Each of us has been personally called by name, just as the Good Shepherd "calls his own sheep by name" (Jn. 10:3). This reality should fill us with both humility and confidence: humility because we recognise that our vocation is a pure gift, not personal achievement; confidence because He who has called us is faithful and will equip us for the mission He has entrusted to us.

In the Syro-Malabar tradition, we understand priesthood as a participation in Christ's threefold ministry as prophet, priest, and king. Our Eastern Fathers emphasise that the priest is an icon of Christ, making Christ present to the community through word, sacrament, and pastoral care. This understanding challenges us to constant conversion so that we might become more transparent icons of Christ the Good Shepherd.

I invite each of you to recall with gratitude the moment of your calling - that mysterious encounter with the Divine Shepherd who looked at you with love and said, “Follow me.” Perhaps it came through a quiet inspiration, the example of another priest, or the encouragement of family or friends. However it came, it was Christ himself who called you, seeing in you the potential to be his hands and heart for his people.

This divine choice should be a source of daily wonder and thanksgiving. In moments of difficulty or doubt, return to this fundamental truth: you are chosen by Christ for a sacred purpose. As our Syro-Malabar liturgy beautifully expresses in the prayer before the Gospel: “Lord our God, enlighten our hearts and minds to listen to Your life-giving and divine commandments. In Your kindness and mercy, grant that they bear in us the fruits of love, hope, and salvation.”

**Consecrated: Set Apart for Sacred Service**

Our priesthood is not merely a function or a profession but a consecration - a setting apart for sacred service. Through the laying on of hands and the prayer of consecration, we have been configured to Christ in a new and deep way. This ontological transformation is not for our glory but for service to God’s people.

In the Syro-Malabar tradition, the rite of priestly ordination beautifully expresses this reality. When the Bishop places the Kappa on the newly ordained, he prays: “May the Lord clothe you with the garment of salvation and the robe of gladness.” This external sign points to the internal reality: we have been clothed with Christ himself and are called to manifest his presence in the world.

This consecration affects every dimension of our lives. Our “professional” identity as priests is not separated from our personal lives. We are priests at all times - 24 hours a day, 7 days a week. This is not a burden but a privilege, for it means that Christ has claimed us entirely for himself and his mission.

Our priestly ordination calls us to a life of integrity and holiness. The faithful should be able to recognise in us men who have truly given themselves to Christ and his Church. This requires ongoing formation and a commitment to spiritual disciplines: daily prayer, meditation on the Scriptures, celebration of the Divine Liturgy with

reverence and devotion, regular confession, and spiritual direction.

As ordained persons, we are called to live the evangelical counsels according to our state of life. While diocesan priests do not take vows of poverty, chastity, and obedience in the same way as religious, these values should nevertheless shape our lives:

- **The simplicity of life** enables the priest to avoid materialism and conspicuous consumption and practise generosity toward those in need.
- **Celibate chastity** is embraced not as a mere renunciation but as a positive testimony to the all-sufficiency of Christ and as a sign of the Kingdom where they "neither marry nor are given in marriage" (Matthew 22:30).
- **Obedience**, not only to ecclesiastical authority but fundamentally to God's will as it is revealed in Scripture, Tradition, and the needs of God's people.

**Sent: The Mission of Shepherding**

The Good Shepherd is not stationary. He goes out in search of the lost sheep. Similarly, our priestly vocation is essentially missionary. We are sent to continue Christ's mission of shepherding God's people, leading them to "green pastures" and "still waters" (Psalm 23:2).

What does it mean to shepherd God's people in the context of our Syro-Malabar Eparchy of Thuckalay? Let me suggest some dimensions of this shepherding mission:

**a. Shepherding through Word**

As priests, we are called to break open the Word of God for our people. This requires diligent study of Scripture, familiarity with our rich Eastern theological tradition, and attentiveness to the signs of the times. Our homilies should not be merely academic lectures or moralistic exhortations, but life-giving encounters with the Word made flesh.

In the Syro-Malabar tradition, the liturgy of the Word is rich with symbolism: the procession with the Gospel, the incensing of the Sacred Text, and the solemn proclamation. These rituals remind us of the centrality of God's Word in the life of the Church. As priests, we must not only proclaim this Word but embody it in our lives.

I encourage you to establish Bible study groups in your parishes to promote the practice of lectio divina and to ensure that your

preaching is rooted in deep prayer and reflection. Remember the words of St Ephrem: "The Scriptures are like a mirror: if a monkey looks in, no apostle will look out."

**b. Shepherding through Sacrament**

Central to our priestly ministry is the celebration of the Holy Qurbana and the other sacraments. In the Divine Liturgy, we present Christ's sacrifice of love and offer His Body and Blood as spiritual nourishment for the faithful. This awesome responsibility should fill us with reverence and awe.

I urge you to celebrate the liturgy with great care and devotion, neither rushing through the prayers nor embellishing them with personal additions. The beauty of our Syro-Malabar liturgical tradition, when celebrated with reverence and proper understanding, can lift the hearts of the faithful to heaven and strengthen them for their Christian journey.

Remember that through the sacraments, especially Reconciliation and Anointing of the Sick, we extend Christ's healing touch to those who are burdened by sin or suffering. Be generous in making these sacraments available to your people, especially to the elderly and the homebound.

**c. Shepherding through Pastoral Care**

The Good Shepherd knows his sheep individually. As parish priests, we are called to know our people -their joys and sorrows, their struggles and hopes. This requires presence and availability. A shepherd who remains distant from the flock cannot effectively care for them.

Make time for regular home visits, especially to the sick, the elderly, and families in crisis. Be attentive to the youth, who face many challenges in today's complex world. Create opportunities for faith formation and community building that respond to the needs of different age groups and life situations.

In our Eparchy, with its diverse communities and mission stations, pastoral care may sometimes require crossing cultural and linguistic boundaries. Let us follow the example of Christ, who transcended social barriers to reach those on the margins.

**d. Shepherding through Leadership**

As shepherds, we are called to care for and lead the flock. This means providing vision and direction for our parishes and communities, helping them discern God's will and respond to the

challenges of our time.

Effective leadership involves empowering the laity to fulfil their baptismal vocation. Encourage and support lay ministries, parish councils, and Uraviams. Remember that the priest is not meant to do everything himself but to "equip the saints for the work of ministry" (Ephesians 4:12).

Leadership also requires courage to address difficult issues and to speak the truth in love. Like the Good Shepherd who confronts the wolf, we must sometimes oppose values and practices that threaten our people's spiritual well-being.

**The Priest as Shepherd 24x7: Challenges and Graces**

Being a shepherd after the heart of Christ is a 24/7 vocation. Unlike a hired hand who works for wages and then goes home, the shepherd's commitment to the flock is constant and total. This total dedication is both the challenge and the beauty of our priestly vocation.

**a. Challenges of the Contemporary Shepherding Ministry**

Let us acknowledge some of the challenges we face in our shepherding ministry today:

- **The challenge of availability:** In an age of instant communication, people expect their priests to be constantly available. Finding a healthy balance between accessibility and necessary boundaries for prayer and rest is not easy.

- **The challenge of secularism:** We minister in a culture increasingly shaped by secular values and consumerism. Helping our people to live counter-cultural lives of faith requires wisdom and discernment.

- **The challenge of unity:** Our Eparchy encompasses diverse communities with large territory. Building unity while respecting diversity demands patience and inclusivity.

- **The challenge of personal well-being:** The demands of ministry can sometimes lead to physical exhaustion, emotional depletion, and spiritual dryness. Caring for ourselves is not selfish but necessary if we are to care effectively for others.

**b. Graces of Shepherding Ministry**

Yet alongside these challenges are abundant graces:

- **The grace of intimacy with Christ:** Our ministry constantly

brings us into communion with Christ, especially in the celebration of the sacraments and in prayer.

• **The grace of meaningful relationships:** As priests, we are privileged to witness the most significant moments in people's lives - births, marriages, deaths, and moments of conversion and healing.

• **The grace of witnessing transformation:** We see firsthand how God's grace transforms lives, heals wounds, and brings hope to situations of despair.

• **The grace of community:** We do not minister alone but as part of a presbyterate, supporting and encouraging one another in our common mission.

Dear Fathers, as we reflect on our vocation as shepherds after the heart of Christ, let us renew our commitment to this sacred calling. Let us ask the Good Shepherd to purify our motivations, strengthen our resolve, and deepen our love for the flock entrusted to our care.

I encourage each of you to take time for personal prayer, especially during the remaining days of Lent and Easter season, focusing on your identity as a shepherd in the image of Christ. Reflect on the words of St Augustine: "For you, I am a Bishop; with you, I am a Christian." For your people, you are a priest; with them, you are a disciple on the journey of faith.

Let us support one another through fraternal gatherings, shared prayer, and honest conversations about the joys and challenges of ministry. Let us be attentive to signs of burnout or disillusionment in our brother priests and offer support and encouragement.

Finally, let us entrust our priesthood to Mary, Mother of Priests and Queen of Apostles. In our Syro-Malabar tradition, we honour Mary as the perfect disciple who said "yes" to God's call without reservation. May she intercede for us so that we may follow her example of faithful discipleship and selfless service!

## CONCLUSION

As I conclude this circular, let me remind you that we are still in the holy season of Lent. We are called upon to spend these days spiritually undertaking the disciplines of prayer, fasting and almsgiving in a meaningful way. Let us not lose the fervour of this season and not deprive ourselves of the graces that this holy season brings. During this period, even as we discipline our bodies through self-denial and fasting, let us emphasise embodying the values we preach. Let us underscore God's love and how we need to embody

this love in our ministries. Love consists not in limiting God by our human equations of love but by allowing God's infinite love to redefine our own utterly. Let us also prepare ourselves to enter into the holiest week in the Catholic Calendar with the celebration of the Palm Sunday on 13 April 2025. May the commemoration of the passion, death and resurrection of Jesus enable us to become shepherds after the heart of the Good Shepherd who willingly laid down his life for his sheep!

† George Rajendran SDB
Bishop of Thuckalay

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| ஏப்ரல் *13* | – | கயத்தாறு ஆலய அர்ச்சிப்பு |
| ஏப்ரல் *14* | – | அருட்சகோதரர்களுக்கு திருவுடை, மற்றும் சிறு திருப்பட்டங்கள் வழங்குதல் |
| ஏப்ரல் *15* | – | திருத்தொண்டர் திருப்பொழிவு, பரைக்கோடு |
| ஏப்ரல் *16* | – | அருட்தந்தையர் மற்றும் துறவறத்தாருக்கு தியானம் |
| ஏப்ரல் *17* | – | பெசகா வியாழன் |
| ஏப்ரல் *18* | – | புனித வெள்ளி |
| ஏப்ரல் *20* | – | உயிர்ப்பு ஞாயிறு |
| ஏப். *21-25* | – | அருட்சகோதரர்களுக்கான பணிப்பயிற்சி முகாம் |
| ஏப்ரல் *27* | – | விசுவாச பயிற்சி விழா தொடக்கம் |
| ஏப்ரல் *30* | – | குருத்துவ திருப்பொழிவு, திருதொண்டர் சுனில் ஆண்டனி, கிள்ளியூர். |




“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.”
(மாற் 16:15)

**அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு. (உரோமையர் 10, 17)**

**தலைமையாசிரியர்களின் கூட்டம்**



நமது மறைமாவட்ட மறைக்கல்வி தலைமையாசிரியர் கூட்டம் 2025 மார்ச் 29 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை KKSSS அலுவலக அரங்கில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் தூய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள், இயேசு மக்களுக்கும் சீடர்களுக்கும் கற்றுக்கொடுக்கும் வேளையில் அவர் கையாண்ட யுக்திகள் இக்கூடுகையில் விளக்கப்பட்டு அவற்றை ஆசிரியர்களும் பின்பற்ற வேண்டும் என தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறினார்.

மேலும் இக்கூட்டத்தின் போது ஏப்ரல் மே மாதங்களில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றி கூறினார். வகுப்பு ½ முதல் வகுப்ப 9 வரையுள்ள மாணவர்களுக்கான 2-ஆம் பருவத்தேர்வுக்கான வினாத்தாள் அனைத்து மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது

அனைத்து தலைமையாசிரியர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர் தொடர்ந்து நன்றியுரை மற்றும் செபத்துடன் கூட்டமானது 4.30 மணியளவில் இனிதே முடிவுற்றது.

**2-ஆம் பருவத்தேர்வு**



2024-25 ஆம் ஆண்டு மறைக்கல்வி வகுப்பு ½ முதல் வகுப்பு 9 வரையுள்ள மாணவர்களுக்கான 2-ஆம் பருவத்தேர்வு மார்ச் 30 ஞாயிற்றுக்கிழமை அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

**மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி**

நமது மறைக்கல்வி மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி 6-ஆம் பிரிவு வெற்றிகரமாக முடிந்தது. 7-ம் பிரிவு மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள் ஜனவரி 26 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமானது. ஒவ்வொரு வாரமும் வகுப்புகள் ஞயிற்றுக்கிழமை படந்தாலுமூடு திரு இருதய ஆலய அரங்கில் வைத்து பிற்பகல் 2.00 மணி முதல் 5 மணிவரை நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்புகள் 6 ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றது. ஜனவரி 26 ஞாயிற்றுக்கிழமை தொடக்க வகுப்பு மற்றும் திருவிவிலியம் குறித்து இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் மற்றும் அருட்தந்தை. ஷாஜன் நெட்டப்பொங்கு அவர்களும் பிப்ரவரி 02 ஞாயிற்றுக்கிழமை குணமளிக்கும் அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை. தோமஸ் சத்தியநேசன் அவர்களும், பிப்ரவரி 09 ஞாயிற்றுக்கிழமை பத்து கட்டளைகள் பற்றி அருட்தந்தை. ஸிஜோ ஜோஸ் ஐக்கரகுந்நேல் அவர்களும், பிப்ரவரி 16 ஞாயிற்றுக்கிழமை

திருவழிபாடு மற்றும் நுழைவு அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை. ஜஸ்டின் செறுவேலில் அவர்களும், பிப்ரவரி 23 மற்றும் மார்ச் 02 ஞாயிற்றுக்கிழமைகளில் மூவோர் கடவுள் மற்றும் கிறிஸ்துவியல் பற்றி அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்களும் மார்ச் 02 ஞாயிற்றுக்கிழமை பணிவிடை அருளடையாளங்கள் பற்றி அருட்தந்தை. ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்களும் திருச்சபை மற்றும் இறுதி முடிவுகள் பற்றி அருட்தந்தை. ஜோஷி குளத்திங்கல் அவர்களும் சிறப்பாக வகுப்புகள் நடத்தினார்கள். 7-வது பிரிவு மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்பில் 45 ஆசிரியர்கள் கலந்துக்கொணடு பயன்பெற்றனர். இப்பயிற்சி வகுப்பில் கலந்துக்கொணட ஆசிரியர்களுக்கு பேரருட்தந்தை ஜோஷி குளத்திங்கல் அவர்கள் சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

**DIOCESE LEVEL BIBLE QUIZ COMPETITION FOR STUDENTS 2024-25**

**RESULT**

STD : V- BOYS

| | | |
|---|---|---|
| I | Jefrin JD (16.5/25) | Mangarai |
| II | Efrin E (14/25) | Palappallam |
| III | Sherjin Shibu SJ (12.5/25) | Varuthattu |

STD : V- GIRLS

| | | |
|---|---|---|
| I | Earlene Dizaa (17/25) | Mangarai |
| II | Maria Brigitta CA (15.5/25) | Nithiravilai |
| II | Sharmini KA (15.5/25) | Padanthalumoodu |
| III | Alaina S Arun (13/25) | Annikkarai |

STD : VI- BOYS

| | | |
|---|---|---|
| I | Jerson JD (22.5/25) | Mangarai |
| II | Anisto JA Jefrin (18/25) | Soosaipuram |
| III | Gladin Antony CA (17/25) | Nithiravilai |

STD : VI- GIRLS

| | | |
|---|---|---|
| I | Leesha Riyani M (19.5/25) | Mangarai |
| II | Disha Sharmin YS (19/25) | Varuthattu |
| III | Jenifer Mol JJ (15.5/25) | Kalluvilai |

STD : VII- BOYS

| | | |
|---|---|---|
| I | Jinto S Jose (22.5/25) | Malaicode |
| II | Rijo R J (19/25) | Kattathurai |
| III | Abinav JV (17.5/25) | Varuthattu |

STD : VII- GIRLS

| | | |
|---|---|---|
| I | Lina AS Jessy (23.5/25) | Varuthattu |
| II | Agna Blessy AR (17/25) | Manjalumoodu |
| III | Hiba Angel J (16.5/25) | Nithiravilai |

STD : VIII- BOYS

| | | |
|---|---|---|
| I | Jeshwin A (21/25) | Soosaipuram |
| II | Anto S Raj (16/25) | Mezhacode |
| III | Geo Francisco (15/25) | Varuthattu |

STD : VIII- GIRLS

| | | |
|---|---|---|
| I | Aldrina Shanu AS (16.5/25) | Muzhucode |
| II | Adrin JA (15/25) | Pallikkonam |
| III | Mary Jensiha C (12.5/25) | Palappallam |

STD : IX- BOYS

| | | |
|---|---|---|
| I | Jan David (15/25) | Manjalumoodu |

STD : IX- GIRLS

| | | |
|---|---|---|
| I | Aslin JA Jefna (17.5/25) | Soosaipuram |
| II | Anushka RB (16/25) | Manjalumoodu |
| III | Lakssana (15.5/25) | Nithiravilai |

STD : X- BOYS

| | | |
|---|---|---|
| I | Shalin SL (19/25) | Nithiravilai |
| II | Jijo RM (12/25) | Vayalinkarai |
| III | Abin E (11.5/25) | Malaicode |
| III | Jershon J (11.5/25) | Palappallam |

STD : X - GIRLS

| | | |
|---|---|---|
| I | Ashini SB Clare (16.5/25) | Karode |
| II | Dona Chris CG (15.5/25) | Nithiravilai |
| III | Joelin Benila J (15/25) | Mangarai |

STD : XI- BOYS

| | | |
|---|---|---|
| I | Stebin SC (14/25) | Mukkuttukal |
| II | Ashwin JV (12/25) | Varuthattu |
| III | Asfrin Mariyo D (11.5/25) | Soosaipuram |

STD : XI - GIRLS

| | | |
|---|---|---|
| I | Jenshika SC (17/25) | Mangarai |
| II | Josmiya Lebernisha UL (16/25) | Varuthattu |
| III | Ashlin Femi C (14.5/25) | Muzhucode |

STD : XII- BOYS

| | | |
|---|---|---|
| I | Jobin S (14/25) | Padanthalumoodu |
| II | Austil AJ (10/25) | Nithiravilai |
| III | Berlin Vijay P (9.5/25) | Mangarai |
| III | Blessing S (9.5/25) | Malaicode |

STD : XII - GIRLS

| | | |
|---|---|---|
| I | Arshika AK (23/25) | Padanthalumoodu |
| II | Jemisha M (22/25) | Mangarai |
| III | Ajaysha Daffini D (13/25) | Fathimapuram |

## DIOCESE LEVEL BIBLE QUIZ COMPETITION FOR TEACHERS 2024-25 RESULT

GENTS

| | | |
|---|---|---|
| I | Suju R (16/33) | Manjalumoodu |
| II | Seemon Raja V (15/33) | Pilankalai |
| III | Ramesh P (12.5/33) | Mukkuttukal |

LADIES

| | | |
|---|---|---|
| I | Jeevitha S (28/33) | Soosaipuram |
| II | Jerlin J (24.5/33) | Munchirai |
| III | Shyni BS (21/33) | Neethipuram |
| III | Mary Hilda (21/33) | Pallikkonam |
| IV | Asha Rani (20/33) | Mathapuram |
| IV | Jana Jayanthi (20/33) | Thackalivilai |

**அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற**
**இணை இயக்குனர்**

**அருட்தந்தை அபிலாஷ் சேவியர்**
**இயக்குனர்**

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

## ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சி



தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்க நடுவண் செயற்குழு உறுப்பினர்களுக்கான ஒருநாள் தலைமைத்துவப் பயிற்சி 2025 மார்ச் 08 சனிக்கிழமை, காலை 10:00 மணியளவில் கல்லுவிளை, SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட தலைவர் மனோஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் நிகழ்வுகளை வழிநடத்தினார். இளையோர்களின் மூன்று தலைமுறைகள் குறித்து பேசப்பட்டது. இளையோர்களின் அப்போதைய மனநிலை குறித்தும், இன்றைய மனநிலை குறித்தும் எடுத்து கூறப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் இளையோர்களிடத்தில் நிலவும் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இளையோர்கள் குழுக்களாக இருப்பது மகிழ்ச்சியை தருகிறதா, அல்லது தனியாக இருந்து அலைபேசியில் நேரத்தை செலவிடுதல் மகிழ்ச்சியை தருகிறதா என்ற தலைப்பில் விவாதிக்கப்பட்டது. மேலும் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு மூன்று தலைப்புகளில் இளையோர்களின் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது. அவை

1. Video games, Mobile addiction, Violence
2. Love, teenage,

3. Drugs, Gen Z

தலைப்புகளின் அடிப்படையில் கிடைத்த கருத்துக்கள்

1. கடவுளை இப்போது உள்ள தலைமுறைகள் புரிந்து கொள்ளவில்லை. அனைத்தும் ஒரு பொழுதுபோக்காக பார்கிறார்கள். Potential வளரல, கஷ்டம் இல்லாமல் எல்லாம் கிடைக்க வேண்டும். கடவுளை பற்றி விழிப்புணர்வு கொண்டு வரணும். பொது அறிவு சார்ந்த விளையாட்டுக்கள் பண்ணலாம்.

2. பெற்றோர் இளையோர்களிடம் மனம்திறந்து பேசணும். அவங்க கூட நேரம் செலவிட வேண்டும், மறைக்கல்வி பயிலும் போதே பிள்ளைகளுக்கு எது நல்லது, எது கெட்டது என சொல்லிக் கொடுக்க வேண்டும்.

3. Gen Z தலைமுறையில் positive பற்றி பேசினார்கள். (நிறைய வாய்ப்புகள் இருக்கு). தொழில்நுட்பத்தை நல்ல முறையில் பயன்படுத்துகிறார்கள். நம்பிக்கையாக இருக்கிறார்கள்.

தொடர்ந்து இயக்குநர் தந்தை அவர்கள் இந்த பிரச்சினைகளிலிருந்து வெளிவர நாம் என்ன செய்ய முடியும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டது. தொடர்ந்து மதிய உணவுக்கு பின், 2.00 மணியளவில், தலைமைத்துவம், குழு மேலாண்மை, பற்றி பேசப்பட்டது. அதில் முக்கியமாக முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்

1. Stop blame game
2. Mirror effect (commitment, responsibility)
3. Look at my self
4. Social identity
5. Empathy
6. Engineering the solution

அதன் பின் இருகுழுக்களாக பிரிக்கப்பட்டு இருதலைப்புகளில் கருத்துகள் நாடகவடிவில் நடத்தப்பட்டது.

1. போதைப்பொருளுக்கு அடிமையான ஒரு இளையோரை எப்படி ஆலயத்திற்கு கொண்டு வர முடியும்.

2. ஒரு பங்கில் இளையோர்கள் இருக்கிறார்கள், ஆனால் யாரும் ஆலயத்திற்கு வரவில்லை அவர்களை நாம் எப்படி ஆலயத்திற்கு கொண்டு வருவது.

இறுதியாக தலைமைத்துவம் மற்றும் குழு மேலாண்மைக்கு

இடையேயான வேறுபாடுகளும், நாம் எவ்வாறு தலைவராக மாற முடியும் என கருத்துகளை வழங்கினார். மாலை 4.00 மணியளவில் நிகழ்வுகள் முடிவடைந்தது.

## இளையோர் TAIZE ஜெபம்

தவக்காலத்தை முன்னிட்டு படந்தாலுமூடு, நித்திரவிளை மறைவட்டத்தைச் சார்ந்த இளையோருக்கான TAIZE ஜெபம் 2025 மார்ச் 23, வயலங்கரை புனித அந்தோணியார் ஆலயத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 30க்கும் மேற்பட்ட இளையோர் கலந்து கொண்டனர்.

மார்ச் 30, தக்கலை பிலாங்காலை மறைவட்டத்தைச் சார்ந்த இளையோருக்கான TAIZE ஜெபம், பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 20க்கும் மேற்பட்ட இளையோர் கலந்து கொண்டனர்.

## அலகு சந்திப்பு - தக்கலை பிலாங்காலை மறைவட்டம்



தக்கலை பிலாங்காலை மறைவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தற்போது மறைவட்டத்தில் அனைத்து பங்குகளையும் பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் இளயோர்களுடன் இணைந்து திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அதன்படி, மார்ச் 23, கைசாலவிளை, பிலாங்காலை மற்றும் பரைக்கோடு ஆலயத்தில் அலகு சந்திப்பு நடைபெற்றது.

**செயலர், ஜினோ**




## மறைவட்ட சைதன்யா கூட்டம்

## படந்தாலுமூடு மறைவட்டம்

மன அழுத்தத்தை குறைக்கும் நுட்பங்கள், ஆரோக்கியமான உணவு பழக்கம், முகப்பொலிவைமேம்படுத்தவும், மகிழ்ச்சியான கார்மோன்கள், உடலின் இறையியல், எப்படி ஜெபிக்க வேண்டும் என்ற வகுப்பானது மார்ச் 16, படந்தாலுமூடு மறைவட்ட தாய்மார்களுக்கு நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் வழிநடத்தினார்கள். படந்தாலுமூடு மறைவட்டத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் மறைவட்ட இயக்குநர் தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்கள் தலைமையில் தேர்ந்தெடுக்கபட்டனர்.



மார்ச் 03, அணைமுகம் மற்றும் பத்துக்காணி மாதர் ஜோதிஸ் இயக்கத்தை இயக்குநர் தந்தை அவர்கள் பார்வையிட்டு இயக்கத்தை முன்னேற்றபாதையில் கொண்டு செல்வதை பற்றி கலந்துரையாடினார். மார்ச் 09, தெற்றியோடு மாதர் ஜோதிஸ் இயக்ககிளை பார்வையிடப்பட்டது.



மார்ச் 16, மஞ்சாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்களின் கூடுகை மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோஸ்வயலில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இயக்கத்தை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்வது பற்றி கலந்து ஆலோசிக்கபட்டது.




மார்ச் 29, மஞ்சாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்கள் மறைவட்ட இயக்குநர் அருட் தந்தை ஜோஸ்வயலில் அவர்களுடன் இணைந்து பெருஞ்சிலம்பு Providence home பார்வையிட்டனர்.

**அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்**
**இயக்குநர்**




# வின்செென்ட்-தே-பவுல் சபை



வின்சென்ட் தே பவுல் சபை - மஞ்சாலுமூடு ஜூபிலி ஆண்டு மற்றும் தவக்காலத்தை முன்னிட்டு (16-03-2025) ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலி முடிந்த பிறகு 2 நபருக்கு ஆடு (மறு சுழற்சி முறை) ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை மார்டின் கண்டம்பறம்பில் அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வானது மத்திய சபை பொறுப்பாளர் சகோதரர் ஜார்ஜ் அவர்களின் மேற்பார்வையிலும் மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் சகோதரர் ஜோஸ் அவர்களின் முன்னிலையிலும் கிளைச் சபை தலைவர் சகோதரர் ஜினோ அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் அனைத்து ஏற்பாடுகளையும் இணைத் தலைவர் சகோதரர் அஜித் அவர்கள் கவனித்து கொண்டார்.

மார்ச் 30- ஆம் தேதி மஞ்சாலுமூடு வட்டார சபை சார்பாக பெருஞ்சிலம்பு Providence Home - க்கு 35 உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டதோடு, நோயாளிகளுக்காக செபித்து பண உதவியும் செய்து வந்தோம். சிறப்பு அழைப்பாளர் மாலைக் கோடு பங்கு அருட்தந்தை ஜோஸ் அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்வின் அனைத்து ஏற்பாடுகளையும் செய்த வட்டார சபை

தலைவர் சகோ.ஜோஸ் அவர்களுக்கு பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் சார்பாக மனதார நன்றி.

**சுழற்சி திட்டம் வழங்குதல்**

மஞ்சாலுமூடு வட்டார சபைக்கு உட்பட்ட முக்கூட்டுக்கல் புனித மரியன்னை பெண்கள் கிளைச் சபை சார்பாக 30-03- 2025 அன்று 12 நபர்களுக்கு ரூ. 10,000 /- வீதம், மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் சகோதரர். திரு. ஜோஸ் அவர்கள் தலைமையிலும், மத்திய சபை பொறுப்பாளர் சகோ. ஜார்ஜ் வின்சென்ட் மற்றும் திட்ட கண்காணிப்பாளர் சகோதரர் சிபு மோன் ஆகியோர் முன்னிலையிலும் ரூ.1,20,000/- திட்டத் தொகை வழங்கப்பட்டது.



சூசைபுரம் வட்டார சபைக்கு உட்பட்ட சூசைபுரம் பங்கில் செயல்படும் புனித சூசையப்பர் கிளைச்சபை சார்பில் சுழற்சி திட்டம் வழங்குதல் 30.03.2025 ஞாயிறு காலை பேரருள்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் ரூபாய் 16 ஆயிரம் வீதம் இரு நபர்களுக்கு ரூ.32,000/- மூன்றாவது சுற்றாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மத்தியசபை திட்ட அலுவலர் சகோதரர் எட்வின்சன் வட்டார சபை தலைவர் சகோதரர் ஜான் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**இவண்,**

D.P. ஷாஜி, தகவல் தொடர்பாளர்

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் (KKSSS) CTWWC திட்டத்தின் சார்பாக மார்ச் மாதம் 2, 9, மற்றும் 23 ஆகிய தேதிகளில் பாலப்பள்ளம், மாலைக்கோடு, முழுக்கோடு மற்றும் தக்காளிவிளை ஆகிய ஆலயங்களில் கேட்கீப்பிங் தொடர்பான குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வுகளின் முக்கிய நோக்கம் குழந்தைகள் பாதுகாப்பு, குடும்ப அடிப்படையிலான பராமரிப்பு, மற்றும் குழந்தை பிரிவினையைத் தடுக்க சமூகத்தின் பொறுப்பு குறித்து ஆலய உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். இந்த நிகழ்ச்சியில் 100-க்கும் மேற்பட்ட ஆலய உறுப்பினர்கள் மற்றும் பங்குப் பேரவை உறுப்பினர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, கேட்கீப்பிங் முறையின் அவசியம், குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குடும்ப வலுவூட்டலின் முக்கியத்துவம் குறித்து விரிவாக கலந்துரையாடினர். இந்த நிகழ்வு குடும்பங்களை வலுப்படுத்துதல், அரசாங்க மற்றும் சமூக ஆதரவு அமைப்புகளுடன் இணைத்தல் போன்ற முக்கிய அம்சங்களை வலியுறுத்தியது. இந்த முயற்சி சமூக ஈடுபாடு மற்றும் மத அடிப்படையிலான முயற்சிகள் மூலம் குழந்தைகள் நலத்தை பாதுகாக்கும் KKSSS நிறுவனத்தின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. மேலும் ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பான மற்றும் பராமரிப்பு நிறைந்த குடும்ப சூழலில் வளர வேண்டும் என்பதே இந்த நிகழ்வின் மையக் கருத்தாகும்.



## சுய உதவிக் குழுக்களின் ஆண்டு விழா



கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் ஆண்டு விழா மற்றும் மகளிர் தினம் மார்ச் எட்டாம் தேதி சுமார் 2 மணி அளவில் அளவில் நடைபெற்றது. செயல்பாடுகளை துரிதப்படுத்து என்ற மைய சிந்தனையுடன் பெண்கள் தினப்பேரணி மற்றும் மகளிர் தின ஆண்டு விழா நடைபெற்றது. மகளிர் தின ஆண்டு விழாப் பேரணி கல்லுவிளை கருணாலத்தில் வைத்து சிஎம்சி மாகாணத் தலைமை அருள்சகோதரி  அவர்கள் கொடியசைத்து துவங்கி வைத்தார்கள். கே கே எஸ் எஸ் இயக்குனர் தந்தை அவர்கள் உடன் இருந்தார்கள். செயல்பாடுகளை துரிதப்படுத்து என்ற தலைப்பில் வாசகங்களை கொண்ட பேரணியானது  ஆசீர் ஆடிட்டோரியத்தில் நிறைவு பெற்றது. பேரணியைத் தொடர்ந்து குழுக்களின் ஆண்டு விழா மற்றும் மகளிர் தின ஆண்டு விழா கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் புரவலரும்  தக்கலை மறை மாவட்ட ஆயருமான மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆயர் அவர்கள் தலைமையுரை ஆற்றும் போது  குழுக்களின் மூலமாகத்தான் பெண் சமுதாயம் மிகப்பெரிய மாற்றத்தை கண்டுள்ளது. பெண்கள்; ஆசிரியப்பணி மற்றும் மருத்துவத் துறையில் மட்டுமே பணிபுரிந்த  காலம் போய் இன்று அனைத்து துறைகளிலும் சாதிக்கிறார்கள் என்று கூறினார்கள். தொடர்ந்து கிறிஸ்து

யூபிலி ஆண்டு 2025-யை ஒட்டி கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பாக 40 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. அத்திட்டத்தின் சார்பாக முதல் பயனாளிக்கு திட்ட காசோலையினை வழங்கி துவங்கி வைத்தார். தொடர்ந்து சிறப்பு விருந்தினராக நாஞ்சில் கத்தோலிக்க கல்லூரி பேராசிரியை ஜெப கிறிஸ்டி வினிடோ அவர்கள் பெண்களின் முன்னேற்றம் அன்றும் இன்றும் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்பதை குறித்து பேசினார்கள். தொடர்ந்து பல்வேறு சாதனைப் பெண்களை குறித்தும் குமரி மாவட்டத்தில் பெண்கள் கண்ட வளர்ச்சியை பற்றியும் பேசினார்கள். தொடர்ந்து கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருள் தந்தை தாமஸ் செபாஸ்டின் அவர்களும் மூளகுமூடு பஞ்சாயத்து தலைவி திருமதி ஜெனிஷா அஜித் அவர்களும் பெண்கள் முன்னேற்றம் என்ற தலைப்பில் சிறப்பாக வாழ்த்துரை வழங்கினார்கள். நிகழ்விற்கு இடையிடையே சுய உதவிக் குழுக்களின் விழிப்புணர்வு பாடல் நடனம் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும் நடனம் மூலம் ஒரு பெண்ணின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள நிகழ்வுகள் நடனமாக படம் பிடித்து காட்டப்பட்டது. இந்நிகழ்வில் தக்கலை மறை மாவட்டத்தின் குருகுல முதல்வரும் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் தலைவருமான பேரருள்தந்தை தாமஸ் பவத்துப்பரம்பில் அவர்களும் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் துணை இயக்குனர் அருள்தந்தை சுபின் அவர்களும் திண்டுக்கல் மாவட்டத்தின் முன்னாள் திட்ட அலுவலர் திரு ராஜசேகர் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். **குமரியை நேசிப்போம்** என்ற கருத்தினை மையமாக வைத்து குமரியின் பசுமையை மேம்படுத்த அனைவருக்கும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கும் திட்டம் துவங்கப்பட்டது. இந்த மகளிர் தின ஆண்டு விழாவில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுய உதவி குழு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வினை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்கள் இணைந்து ஒருங்கிணைந்தார்கள்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து



2025 மார்ச் மாதம் ஒன்றாம் தேதி திருச்சூர் மேரி மாதா குருமடத்தில் பாதுகாவலர் விழா கொண்டாடப்பட்டது. இரண்டாம் தேதி மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர்களின் பிரிவு உபசார விழா நடைபெற்றது. ஏழாம் தேதி முதல் பதிமூன்றாம் தேதி வரை தேர்வுகள் நடைபெற்றன. பின் இரண்டு நாட்கள் தியானமும் தொடர்ந்து விடுமுறை ஆரம்பமானது. மங்கலப்புழ குருமடத்தில் 12, 14 ஆகிய நாட்களில் பருவத் தேர்வுகள் நடைபெற்றன. அதை தொடர்ந்தும் இரண்டு நாட்கள் தியானம் நடைபெற்றது. ருஹாலயா குருமடத்தில் தேர்வுகள் நடைபெற்று வருகிறது. குருமடங்கள் அனைத்திலும் விடுமுறை துவங்கியது. 27 அன்று சகோ ஜூபின் துணை திருத்தொண்டர் பட்டம் பெற்றார். ஏப்ரல் 14 சிறிய பட்டங்களும், 15 திருத்தொண்டர் திருப்பட்டமும் நடைபெற உள்ளது.

புனித மரியன்னை இளம் குருமடத்தில் தற்போது உள்ள அருட்சகோதரர்களின் பயிற்சி ஆண்டின் இறுதி நாள் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து அருட்சகோதரர்களுக்கு பிரியாவிடை வழங்கப்பட்டது.

***சகோ யோசேப் & வின்சிலின்***

# மறைமாவட்டச் செய்திகள்

## மகளிர் தின விழா

மார்ச் 05 கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக கயத்தாறு மற்றும் விருதுநகர் மறைத்தொண்டு தளங்களில் மகளிர் தினத்தை கொண்டாடியது. நிகழ்ச்சிகளை அருட்தந்தை. ஜோமோன் மங்கலாமடம் மற்றும் அருட்தந்தை. அஜின் சி ஜோசப் ஒருங்கிணைத்தார்கள். பெண்கள் சுய வேலை வாய்ப்புகளில் மேம்படுவதற்கு 20 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது. மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இதில் பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல், அருட்தந்தை. எபி பூவத்தும்மூட்டில், அருட்தந்தை. சுபின் புத்தன்புரக்கல், உள்ளூர் தலைவர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## கம்பம், அங்கூர்பாளையத்தில் கிராம விழா

கம்பம் மறைத்தொண்டு தளத்தில் உள்ள அங்கூர்பாளையம் கிராமத்தில் மார்ச் 7 மாலை 6:00 மணிக்கு, தேனி-கம்பம் மிஷன் ஒருங்கிணைப்பாளரின் வழிகாட்டுதலின் கீழ், கம்பம் திரு இருதய அருட்சகோதரிகள் ஏற்பாடு செய்திருந்த கிராமிய கொண்டாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வானது; அனைத்து கிராம மக்களையும் ஒன்றிணைத்து, மகளிர் தின கொண்டாட்டம், தார்மீக மதிப்பீடுகளை பற்றிய விழிப்புணர்வு, குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு நடத்தப்பட்டது. அருட்சகோதரிகள் எல்சி SH அவர்கள், கிராமத் தலைவர்களின் உதவியுடன் முழு நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்தார். விழாவில் சுமார் 250 பேர் கலந்து கொண்டனர். பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் தலைமை தாங்கி, கிராம மக்கள் எதிர்கொள்ளும் கல்வியின்மை, பெண்களுக்கு அதிகாரமளித்தல், மதுவுக்கு அடிமையாதல், எதிர்காலத்தில் சேமிப்பு இல்லாமை, சுயஉதவி குழுக்களின் தேவை போன்றவற்றை எடுத்துரைத்து

செய்தியை வழங்கினார். காஞ்ஞிரப்பள்ளி மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோசப் வெள்ளமற்றம், காஞ்ஞிரப்பள்ளி SH மாகாணத்தின் அருட்சகோதரிகள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து பெண்களுக்கும் சேலைகள் வழங்கப்பட்டன.

## அருட்தந்தையர்கள் கூட்டம்

மார்ச் 4 படந்தாலுமூடு - நித்திரவிளை மறைவட்ட அருட்தந்தையர்கள் கூட்டம் வாறுத்தட்டு புனித சவேரியார் ஆலயத்திலும், சூசைபுரம் - தக்கலை பிலாங்கலை மறைவட்ட அருட்தந்தையர்கள் கூட்டம் சூசைபுரம் புனித சூசைப்பர் மறைவட்ட ஆலயத்திலும் நடைபெற்றது. பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில் அவர்கள் கியூரியா பிரதிநிதிகளாக பங்கேற்றார்கள். ஆறுகாணி - களியல் - மஞ்சாலுமூடு மறைவட்ட அருட்தந்தையர்கள் கூட்டம் மார்ச் 11 குலசேகரம் புனித ஜான் பால் II (SABS கன்னியர் இல்ல) ஆலயத்தில் பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் தலைமையில் நடத்தப்பட்டது. பங்களவிலான மறைபரப்பு பணி, இயக்கங்களின் செயல்பாடுகள், மறைக்கல்வி மற்றும் அதன் உருவாக்கத் திட்டங்கள் தொடர்பான கேள்விகள், பங்களவிலான யூபிலி கொண்டாட்ட நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் மற்றும் தவக்கால செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

## முக்கூட்டுக்கல் கன்னியர் இல்ல சிற்றாலயம் மந்திரிப்பு

பேரருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில் அவர்களால் மார்ச் 15 முற்பகல் 11:00 மணிக்கு முக்கூட்டுக்கல் SH கன்னியர் இல்லத்தின் புதுப்பிக்கப்பட்ட ஆலயம் மந்திரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முக்கூட்டுக்கல் பங்குத்தந்தை சுபின் புத்தன்புரக்கல், அருட்தந்தையர்கள் மற்றும் மறைமாவட்டத்தில் பணிபுரியும் SH சபையைச் சேர்ந்த அனைத்து அருட்சகோதரிகளும் கலந்துகொண்டனர்.

## மறைவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் துறவற தலைவர்கள் சந்திப்பு

மறைமாவட்டத்தைச்சாரந்த இருபால் துறவற மகாணத்தலைவர்கள் மற்றும் மறைவட்ட பேரருட்தந்தையர்களுக்கான கூட்டம் 2025, மார்ச் 22 அன்று தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. காலை 10:00 மணியளவில் செபத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. சங்கனாச்சேரி மறைமாவட்ட நீதித்துறை இயக்குநர் அருட்தந்தை. ஐசக் ஆலஞ்சேரி, அவர்கள் நிகழ்வுகளை வழிநடத்தினார். தொடர்ந்து மறைபரப்புப் பணியில் எதிர்கொள்ளும் சவால்கள், தொழில், பணி, CRI இன் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது, மதிய உணவுடன் கூட்டம் நிறைவுற்றது. மறைமாவட்டத்தைச்சார்ந்த CMC, FCC, SABS, CMI மற்றும் MCBS துறவற சமூகத்தைச் சார்ந்த 26 உறுப்பினர்கள் கூட்டத்தில் இதில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகளை மறைமாவட்ட ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

## தக்கலை மறை மாவட்ட புலம்பெயர்ந்தோர் பணிக்குழு முதலாவது பெங்களூர் சங்கமம்

தக்கலை மறை மாவட்டத்திலிருந்து பெங்களூரில் வேலை மற்றும் கல்வி ஆகியவற்றிற்காக புலம்பெயர்ந்து வாழும் மக்களை ஒருங்கிணைத்து முதலாவது **பெங்களூரு சங்கமம்** 16.03.2025 இல் தர்மாரம் புனித தோமையார் மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்றது. 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் மறை மாவட்ட மக்களை சந்திக்க பெங்களூருவில் தங்கி இருந்தார். ஞாயிறு மாலைத் திருப்பலி; இயக்குனர் அருள்தந்தை சுமேஷ் வள்ளியாந்தடத்தில் தலைமையில் நடந்தது. சுமார் 6 மணிக்கு மாண்டியா மறை மாவட்ட ஆவண காப்பாளர் பேரருள்தந்தை ஜோமோன் அவர்கள் தலைமையில் பொதுக் கூடுகை நடைபெற்றது. அவர் தலைமை உரையாற்றி சீரோ மலபார் மக்களின் அவசர உதவிக்காக **சமாரியன்** என்னும் செயலியையும் அறிமுகம் செய்தார். அனைவரும் தங்களை சுய அறிமுகம் செய்தனர். தர்மாராம் மறைவட்ட பங்குத்தந்தை மற்றும் உதவி பங்கு தந்தை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆயரின் வாழ்த்துரை காணொளியாக போட்டு காண்பிக்கப்பட்டது. நிகழ்வுகளை மறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு எட்வின்சன் முன்னின்று நடத்தினார். அனைவருக்கும் ஜெபமாலை மற்றும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை செல்வி ஜாஸ்மின் தொகுத்து வழங்கினார். நிறைவாக அன்பின் விருந்தோடு கூடுகை

நிறைவேற்றது. பெங்களூரு ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். ஒருங்கிணைப்பாளர்கள் திரு அனிஷ் மற்றும் திரு பிரவீன் ஆகியோர் அன்பின் உணவை நன்கொடையாக வழங்கினர்.

## அருட்சகோதரி ஆலிஸ் விஜி சி.எம்.சி (72) அவர்களுக்கு இறுதி மரியாதை

202 மார்ச் 17 அன்று அருட்சகோதரி ஆலிஸ் விஜி சி.எம். சி (விஜியம்மா) அவர்கள் காலமானார். நமது மறைமாவட்டத்தில் அவரது அர்ப்பணிப்பு சேவை 12 ஆண்டுகள் நீடித்தது. அருட்சகோதரி விஜியம்மா CMC சபையின் மாகாண தலைவியாக பணியாற்றினார்.



அவர் 3 மார்ச் 2013 அன்று மறைமாவட்டத்திற்கு வந்து, ஆரம்பத்தில் CMC இன் மேலதிகாரியாக பணியாற்றினார். 2019 இல் தக்கலை CMC சபை ஒரு மாகாணமாக உயர்த்தப்பட்டதும், அருட்சகோதரி விஜியம்மா, தக்கலையின் CMC சாவரா மாகாணத்தின் தலைவியாக நியமிக்கப்பட்டார். 2022 முதல், அவர் சித்தங்குடியிருப்பு CMC கன்னியர் இல்லத்தின் தலைவியாக பணியாற்றினார். அருட்சகோதரி விஜியம்மாவின் அயராத உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் விளைவாக, தக்கலையில் சிஎம்சி மாகாணம் பிறந்தது. அவர் நமது மறைமாவட்டத்திற்கு நிதியுதவி மூலம் மட்டுமல்ல, ஆன்மீக முறையிலும் தனது தொடர்ச்சியான ஜெபங்கள் மூலமாகவும், அர்ப்பணிப்புள்ள சகோதரிகளை பல்வேறு துறைகளில் பணியாற்ற அனுப்புவதன் மூலமாகவும் பெரும் பங்களிப்பைச் செய்தார்.



## அருட்சகோதரி பிரிட்ஜெட் பால் தெக்கேபரம்பில் எஸ்.டி.எஸ் (77)

மார்ச் 21 அருட்சகோதரி பிரிட்ஜெட் பால் தெக்கேபரம்பில் எஸ்.டி.எஸ் அவர்கள் காலமானார். பாலை முத்தோலாபுரம் புனித செபாஸ்டியன் ஆலயத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். ஒரு அருட்சகோதரியாக, அவரது அர்ப்பணிப்புச் சேவை நமது மறைமாவட்டத்தில் 18 ஆண்டுகள் நீடித்தது. ஏழு ஆண்டுகள் கரோட்டில் (1980-1987) மற்றும் 11 ஆண்டுகள் மஞ்சாலுமூட்டில் (2003-2012; 2023-2025) அவர் சேவை செய்தார். இறுதிச் சடங்கு மார்ச் 24 காலை 10:00 மணிக்கு மஞ்சாலுமூடு SDS கான்வென்ட் ஆலயத்தில் நடைபெற்றது.

## அருட்தந்தை ஜோஸ் கூலிபுரக்கல் சிஎம்ஐ (74)



மார்ச் 29 அருட்தந்தை ஜோஸ் கூலிபுரக்கல் சி.எம்.ஐ. அவர்கள் காலமானார். சம்பகுளம் பங்கை சேர்ந்த அருட்தந்தை ஜோஸ் அவர்கள் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் களியலில் உள்ள புனித மரியன்னை சிஎம்ஐ பவனில் பணியாற்றினார். CMI திருவனந்தபுரம் மாகாணத்தின் சமூக சேவை ஆலோசகராக பணியாற்றிய போது, 1988 ஆம் ஆண்டு பிலாங்கலையில் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை ஆரம்பித்து, பிலாங்கலையில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு தங்குமிடம் வழங்க உதவினார்.

## அருட்சகோதரி எல்ஸி மேத்யூ செங்ஙண்டயில் (79)



அருட்சகோதரி எல்ஸி மேத்யூ செங்ஙண்டயில் அவர்கள் சேந்நங்கரி புனித ஜோசப் ஆலயத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் பெங்களூர் கண்டன்விளை, புல்லுவிளை, மைசூர் போன்ற இடங்களில் பணி செய்துள்ளார். இவர் தக்கலை மறைமாவட்டத்தில் மஞ்சாலுமூடு பங்கில் நீண்ட காலம் பணியாற்றினார். இவர் மார்ச் 20 ஆம் தேதி இறையடி சேர்ந்தார்கள்.

## மறைவட்டச் செய்திகள்

### தூசைபுரம்

**▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**



மார்ச் 03, 2025, 12ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு திருப்பலி அதை தொடர்ந்து சிறப்பு ஜெபம் நடத்தப்பட்டது. மார்ச் 06, தவக்காலத்தை முன்னிட்டு இளையோர்கள் சார்பாக மாலை 6.00மணிக்கு சிலுவைப் பாதை அதை தொடர்ந்து அருட்தந்தை மிஜோ அவர்களால் பாவசங்கீர்த்தன உரை, நற்கருணை ஆராதனை மற்றும் பாவசங்கீர்த்தனமும் நடைபெற்றன. இதில் 18இளையோர்கள் கலந்து கொண்டனர். மார்ச் 09, திருப்பலி முடிந்தவுடன் பங்கு தந்தை தலைமையில் பங்கு பொது மன்றம் நடைபெற்றனது. மார்ச் 11, இளையோர்கள் திருப்பயணம் சென்றனர். மார்ச் 13 படுக்கை நோயாளிகளுக்கு இல்லங்களில் அருட்தந்தை, அருள்சகோதரி சென்று ஜெபித்து நற்கருணை வழங்கப்பட்டது. மார்ச் 16, அருட்தந்தை டோஜி அவர்களது பெயர் கொண்டதிருநாள் கொண்டாடப்பட்டது. எல்லா வியாழக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு இளையோர்கள் சார்பாக சிலுவைப் பாதை சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலை 6.00 மணிக்கு உறவியங்களில் 16 இல்லங்களில் சென்று சிலுவைப் பாதை நடைபெற்றன. மார்ச் 30 புனித பயணமாக வேளாங்கண்ணி, மதுரை மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் அருட்தந்தை டோஜி அருட்சகோதரிகள் பங்கு மக்கள் 50பேர் சென்று திருப்பலி நிறைவேற்றி சிலுவைப் பாதை நடத்தினார்கள்.

### புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்



மார்ச் 03, பங்குதந்தை சந்தோஷ் அவர்களின் பிறந்த நாள் திருப்பலி முடிந்தவுடன் கொண்டாடப்பட்டது. தவக்காலத்தை முன்னிட்டு எல்லா வியாழக்கிழமைகளில் திருப்பலியும், சிலுவைப் பாதையும் நடைபெற்றன. எல்லா வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப் பாதை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் உறவியங்களில் சிலுவைப் பாதை நடைபெற்றன. மார்ச் 23, புனித சூசையப்பர் விழாவும் பங்கு தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் பெயர் கொண்ட விழாவும் கொண்டாடப்பட்டது. இளையோர்கள் சார்பாக நினைவுப்பரிசு பங்கு மக்கள் அனைவரும் சேர்ந்து வழங்கப்பட்டது.

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்

மார்ச் 03, அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கிய சாமி அவர்களால் சாம்பல் திங்கள் கொண்டாடப்பட்டது. தவக்காலத்தை முன்னிட்டு எல்லா நாட்களிலும் திருப்பலியும் எல்லா வெள்ளிகிழமைகளில் சிலுவை பாதையும் நடைபெற்று வருகிறது. மார்ச் 30, தவக்கால திருப்பயணத்திற்கு உவரி அந்தோணியார் திருத்தலத்திற்கு பங்குமக்கள் சென்றார்கள்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

2025 மார்ச் மாதத்தில் விவிலியம் வாசிப்பும் அதிலிருந்து வினாடி-வினாப்

போட்டியும் தொடர்ந்து நடைபெறுகிறது. மூன்றாம் தேதி காலை 6 மணிக்கு நடைபெற்ற திருப்பலியில் நெற்றியில் சாம்பல் பூசப்பட்டு தவக்காலம்



தொடங்கப்பட்டது. 16 ஆம் தேதி தொடங்கி ஒவ்வொரு வாரமும் இரண்டு உறவியங்கள் வீதம் வீடுகளில் பவனியாக சிலுவை பாதை நடைபெற்று வருகிறது. 19 ஆம் தேதி புனித சூசையப்பர் திருநாள் கொண்டாடப்பட்டது. 22 ஆம் தேதி பள்ளிகளில் 10, 11, 12 வகுப்புகளில் பயிலும் மாணவ-மாணவியருக்கும், பெற்றோருக்கும் அருள்சகோதரிகள் இல்லத்தில் நடைபெற்ற தியானத்தில் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். 23 ஆம் தேதி அருள்தந்தை அஜின் ஜோஸ் அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் விழா பங்கின் சார்பில் கொண்டாடப்பட்டு, மதியம் 11 மணிக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. 25 ஆம் நாள் ஜோதி நிலைய மாற்று திறனாளிகள் பள்ளி ஆண்டு விழாவில் பங்கில் இருந்து திரளான பேர் கலந்து கொண்டனர். 26 ஆம் நாள் கிறிஸ்து அரசர் மழலையர் பள்ளி ஆண்டு விழாவும் 31 ஆம் தேதி 14 ஆலயங்களுக்கு திருப்பயணமும் நடைபெற்றது.

## தக்கலை – பிலாங்காலை

### ▶ புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் காட்டாத்துறை

மார்ச் 11, திருப்பலியைத் தொடர்ந்து 13 மணி நேர ஆராதனை நடைபெற்றது. 30 ஆம் தேதி, ஞாயிற்றுகிழமை மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும்

மாணவச் செல்வங்கள் இணைந்து கண்டன்விளையில் அமைந்துள்ள சிலுவைமலையில் சென்று சிலுவைப்பாதை நடத்தப்பட்டது.

- **புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை**



மார்ச் 1 ஆம் தேதி ஆலயத்தில் வைத்து பங்குதந்தை தலைமையில் திருத்தொண்டு பணிக்குழு கூட்டம் நடைபெற்றது. 2 ஆம் தேதி திருத்தொண்டு பணிக்குழுவின் துவக்க விழா குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பமானது. 3 ஆம் தேதி காலை 6 மணிக்கு காலை ஜெபம் தொடர்ந்து சாம்பல் திங்கள் திருப்பலி தொடர்ந்து சாம்பல் பூசுதல் திருச்சடங்கு நடைபெற்றது. இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி தொடர்ந்து ஆராதனை நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. 16 ஆம் தேதி புனித அந்தோனியார் உறவியத்தில் தவக்கால தியானம் பங்குதந்தை மற்றும் அருட்தந்தை மிஜோ தலைமையில் நடைபெற்றது. 19 ஆம் தேதி ஆலயத்தில் புனித யோசேப்பு திருவிழா மற்றும் அருட்தந்தை ஆல்பர்ட் ஜோஸ் மற்றும் அருட்சகோதரி ஜெய்சி FCC ஆகியோரின் பெயர் கொண்ட விழா கொண்டாடப்பட்டது. 20 ஆம் தேதி ஆலய மக்கள் இணைந்து கேரளாவிற்கு திருப்பயணம் செல்லப்பட்டது. 23 ஆம் தேதி ஆலயத்தில் திருப்பலி முடிந்த உடன் பங்குதந்தை வழிகாட்டுதலின் படி அருட்தந்தை ஆல்பர்ட் ஜோஸ் அவர்கள் தலைமையில் ஒரு தாயானவள் எவ்வாறு குடும்பத்தை வழிநடத்த வேண்டும் என்னும் தலைப்பில் வகுப்பு தாய்மார்களுக்கு கொடுக்கப்பட்டது. 29 ஆம் தேதி தாய்மார்கள் பங்குதந்தை

தலைமையில் பொன்மலை சென்று சிலுவைப் பாதை ஜெபித்தார்கள். 30 ஆம் தேதி மறைக்கல்வி தேர்வு மற்றும் ஒரு இலவச கண் மருத்துவ முகாம் பங்குதந்தை தலைமையில் நடைபெற்றது. 30 ம் தேதி மதியம் 3.30 மணிக்கு புனித அந்தோனியார் உறவியத்தில் சிலுவைப் பாதை பங்குதந்தை தலைமையில் அனைத்து வீடுகளுக்கும் ஜெபிக்கப்பட்டது. மாலை 4.30 மணிக்கு புனித அன்னை மரியாள் உறவியத்தில் தவக்கால நற்செய்தி பெருவிழா அருட்தந்தை மிஜோ மற்றும் பங்குதந்தை தலைமையில் நடைபெற்றது. ஆலயத்தில் திருப்பலி முடிந்த உடன் புதிதாக வருகை புரிந்த அருட்சகோதரி அமலா அவர்களுக்கு பங்குதந்தை பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினார். கிறிஸ்து பிறப்பு யூபிலியை முன்னிட்டு பங்குதந்தை தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு ஆலயத்தில் வராத மக்களை அழைக்க வீடு சந்திப்பு மற்றும் ஒவ்வொரு வீடுகளிலும் சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது. தவக்காலத்தில் அனைத்து வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பலி தொடர்ந்து ஆராதனையும் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பலி தொடர்ந்து சிலுவைப் பாதையும் மற்றும் தினமும் காலையில் திருப்பலி முடிந்த உடன் சிலுவைப் பாதை நடைபெறுகிறது.

- **புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்**

மார்ச் 3 தடிக்காரன்கோணம் மற்றும் வெள்ளாம்பியில் சாம்பல் திங்கள் திருப்பலி மற்றும் சாம்பல் பூசுதல் திருச்சடங்கு நடைபெற்றது. அனைத்து வெள்ளிக்கிழமைகளில் மாலை 6 மணிக்கு திருப்பலி தொடர்ந்து சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது. தவக்காலத்தில் 10 நாள் ஆராதனை நடைபெற்று வருகிறது.

- **புனித ஜார்ஜியார் ஆலயம் ஆனையடி**

மார்ச் 3, ஆலயத்தில் சாம்பல் திங்கள் திருப்பலி மற்றும் சாம்பல் பூசுதல் நடைபெற்றது. 19 ஆம் தேதி புனித சூசையப்பர் திருவிழா கொண்டாடப்பட்டது. வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 6 மணிக்கு திருப்பலி தொடர்ந்து ஆராதனை மற்றும் சிலுவைப் பாதை நடைபெற்றது. 22 ஆம் தேதி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் புனித சூசையப்பர் திருவிழா திருப்பலி நடைபெற்றது.

▶ **புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை**

மார்ச் 3 ம் தேதி ஆலயத்தில் மாலை 6 மணிக்கு திருப்பலி சாம்பல் பூசுதல் திருச்சடங்கு நடைபெற்றது. எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் அனைத்து உறவியங்களிலும் சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது. புதன் கிழமை மாலை 6.30 மணிக்கு திருப்பலி தொடர்ந்து ஆராதனையும் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு திருப்பலி தொடர்ந்து சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது. மார்ச் மாதம் 31 ம் தேதி பங்குதந்தை தலைமையில் திருப்பயணம் நடைபெற்றது.புனித அல்போன்சா திருத்தலத்தில் திருப்பலியும் நடைபெற்றது.

## படந்தாலுமூடு

▶ **புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் கழுவன் திட்டை**

தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களின் அதிகாரப்பூர்வ ஆலய சந்திப்பு 2025 மார்ச் 23, காலை 8.00 மணிக்கு காலை செபத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து ஆயரின் தலைமையில் திருப்பலியும், அனைத்து பக்த இயக்கங்களின் சந்திப்பும் நடைபெற்றது. மதிய உணவுக்குபின் நோயாளிகளை சந்தித்தார்.

▶ **திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு**

மார்ச் 13, துணை பங்கு தந்தை ஜோஸ்மோன் புரையிடத்துக்குந்நேல் அவர்களின் புனிதரின் பெயர் கொண்ட திருநாள் கொண்டாடப்பட்டது. மார்ச் 31, 14 ஆலயங்களுக்கு திருப்பயணம் செல்லப்பட்டது.

▶ **புனித பவுல் ஆலயம் தெற்றியோடு**

மார்ச் 30, மலையாற்றூர் ஆலயத்திற்கு திருப்பயணம் செல்லப்பட்டது.

## களியல்

▶ **காரோடு புனித சூசைப்பர் ஆலயம்**

காரோடு, புனித சூசையப்பர் ஆலயத்தில் ஆயரின் அதிகாரப்பூர்வ சந்திப்பு 2025 மார்ச் 09 நடைபெற்றது. காலை 8.00 மணிக்கு காலை செபத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து ஆயரின் தலைமையில் திருப்பலியும், அனைத்து



பக்த இயக்கங்களின் சந்திப்பும் நடைபெற்றது. மதிய உணவுக்குபின் நோயாளிகள் மற்றும் இறையழைத்தல் பெற்றோர்களின் வீடு சந்திப்பும் நடைபெற்றது. ஆலய பாதுகாவலர், புனித சூசையப்பர் திருவிழா மார்ச் 19, புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் ஆரம்பமானது. புனித சூசையப்பர் நவநாள் மற்றும் ஆடம்பரத் திருப்பலியும் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் தலைமையில் மார்ச் 22, சனிக்கிழமை அன்று தவக்காலத்திருப்பயணம் நடைபெற்றது. புனித சாவறா குரியக்கோஸ் அடிகளார் வாழ்ந்த பகுதிகள், புனித அல்போன்சா பிறந்த இடம், பரணிங்கானம் போன்ற பகுதிகள் பார்வையிட்டு, சிலுவைப்பாதையும் செபிக்கப்பட்டது. 2025 மார்ச் 23, ஞாயிற்றுக்கிழமை இளையோர் இயக்கம் சார்பாக வள்ளவிளை, புனித சூசையப்பர் முதியோர் இல்லத்திற்கு சென்று மதிய உணவு வழங்கப்பட்டது. 2025 மார்ச் 30, ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் இளையோர்கள் பங்குதந்தையோடு இணைந்து வெள்ளறடை குருசுமலை திருப்பயணம் மேற்கொண்டனர்.

### புனித குழந்தை தெரசாள் ஆலயம் மஞ்சாலுமூடு

மார்ச் 09, தோலடி காருண்யா மனநல காப்பகத்தில் உணவு வழங்கப்பட்டது. மார்ச் 16, காரோடு தேவ சகாயம் மறுவாழ்வு மையத்தில் துணிகள் வழங்கப்பட்டது. மார்ச் 30, பழைய ஆலயம் சுத்தம் செய்யப்பட்டது. மார்ச் 06, புதிய ஆலயம் சுத்தம் செய்யப்பட்டது. மார்ச் 17, இரவு விழிப்பு ஜெபம் நடத்தப்பட்டது.

# தென்காசி மறைத்தள செய்திகள்

## மகளிர் தினம்

மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் மாதம் 9 ஆம் தேதி வாஞ்சி ஆலயத்தில் உள்ள மகளிரை சிறப்பிக்கும் வகையில் பங்கு தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் கேக் முறித்து மகளிர் தினத்தை சிறப்பித்தார்.

## மறைத்தள பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூடுகை

மறைத்தள பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூடுகை மார்ச் மாதம் 15ஆம் தேதி புலரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடத்தில் வைத்து நடத்தப்பட்டது. மலை ஐந்து மணி அளவில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது தொடர்ந்து மாலை செபம் ரம்ஸா செபிக்கப்பட்டது.



அதனை தொடர்ந்து ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி முண்டு நடைய்க்கல் அவர்களின் தலைமையில் கூடுகை நடைபெற்றது. பக்த இயக்கங்களின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு பணிகளை பற்றி கலந்துரையாடப்பட்டது. கூடுகையை பொறுப்பேற்று நடத்திய எம். சி.பி.எஸ் துறவற சபையைச் சார்ந்த அருட்தந்தை தாமஸ்

பொட்டாம்பறம்பில் அவர்களுக்கு அருட்தந்தை அவர்கள் நன்றி கூறினார். இறுதியில் அன்பு விருதுடன் கூட்டம் நிறைவுற்றது.

**தவக்கால திருப்பயணம்**



தவக்காலத்தின் வளர்ச்சியின் படியாக இந்த வருடம் தூய சகாய மாதா மறைத்தளம் சுந்தர பாண்டியபுரம் மற்றும் புனித ஜார்ஜியார் ஆலயம் மேக்கரை மக்கள் இணைந்து மார்ச் மாதம் 31 ஆம் தேதி தவக்கால திருப்பயணம் மேற்கொண்டனர். மலையாற்றூர் மற்றும் புனிதர்களின் ஆலயங்களை சந்தித்து இறை ஆசீர் பெற்றனர்.

சீரோ மலபார் திருச்சபையின் தலைமை யிடமான காக்கனாடு சென்று திருச்சபையின் உயர் பேராயர் மார் ராபேல் தட்டில் மற்றும் முன்னாள் உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி ஆண்டகை அவர்களையும் சந்தித்து ஆசீர் பெற்றனர். பங்கு தந்தை ஜோண் ஜோஸப் அவர்களின் தலைமையில் அருட்தந்தை பிரின்ஸ் ஆகியோர் இணைந்து இறைமக்களுடன் சேர்ந்து திருப்பயணம் சென்று இறை ஆசீர் பெற்று திரும்பினர்.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

## MONTHLY AGENDA – APRIL 2025

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Tue | SINAI: Intercessory Prayer |
| 4 | Fri | VC: Adoration for Vocation (Padanthalumoodu Forane)<br>SINAI: Retreat at Vattakottai |
| 5 | Sat | TM: Mission Meet |
| 6 | Sun | KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Malaicode<br>LC: Central Council Meeting at Kalluvilai<br>SMYM: Central Training<br>SVP: CC Meeting<br>MIG: Online Way of the Cross |
| 7 | Mon | KKSSS: Awareness on World Health Day at Mukkoottukal |
| 8 | Tue | Forane Vicar's Meeting at Thuckalay<br>SINAI: Intercessory Prayer |
| 9 | Wed | ET: Mission Meet |
| 10 | Thu | CML: National Secretariat meeting |
| 11 | Fri | FA: Marriage Preparation Course |
| 12 | Sat | CAT: Promoters Meet at Kalluvilai<br>KII: Committee meeting at Kalluvilai<br>SINAI: Evening Retreat at Malaicode<br>SMYM: Padanthalumoodu Forane Unit visit<br>MS: Way of the Cross in Presidiums<br>FA: Marriage Preparation Course |

| | | |
|---|---|---|
| 13 | Sun | KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Muzhucode<br>LC: Forane Leaders Meeting<br>SVP: AC Meeting |
| 14 | Mon | Birthday of Bishop Mar George Rajendran SDB Vestition and Minor Orders at Sangamam<br>EIRD: Kanyakumari United Christian Council Meeting |
| 15 | Tue | Diaconate Ordinations at Paraicode<br>SINAI: Intercessory Prayer |
| 16 | Wed | Recollection for Priests and Religious at Kalluvilai |
| 17 | Thu | Maundy Thursday |
| 18 | Fri | Good Friday |
| 20 | Sun | Easter Sunday |
| 21 | Mon | EIRD: Regional United Christian Council Meeting |
| 24 | Thu | St. George Patron's day of Mar George Rajendran SDB |
| 25 | Fri | MIG: Core Committee Meeting |
| 26 | Sat | CAT: Diocesan VPV Training for Teachers at Kalluvilai<br>CML: National Executive Committee Meeting<br>KII: Animators meeting at Kalluvilai<br>SINAI: One day Retreat at Kalluvilai<br>SMYM: Padanthalumoodu Forane Gathering<br>STI: End of the Academic Year |

| | | |
|---|---|---|
| 27 | Sun | CAT: VPV Begins CAT: 2nd Sem Examination (Scholarship Exam)X-XII at Respective Foranes<br>MJ: 2025 Opening ceremony<br>SVP: Youth Seminar<br>SMYM: Padanthalumoodu Forane Unit visit & Forane gathering |
| 28 | Mon | KKSSS: PRI Meeting at Kollamcode |
| 29 | Tue | SINAI: Intercessory Prayer |
| 30 | Wed | Ordination of Dn. Sunil at Killiyoor |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

| BIRTHDAY OF REV. FATHERS - APRIL - 2024 | |
|---|---|
| FR. ANTONY MADAPURACKAL | 01 |
| FR. ABY POOVATHUMMOOTTIL | 01 |
| FR. VINU D JOSEPH | 02 |
| FR. JIMMY THEKKEKADUMATHIL | 04 |
| FR. AJEESH ATTIYIL | 08 |
| FR. JOSY PUTHEPURACKAL | 10 |
| FR. JUSTIN SUTHEESH | 11 |
| MAR GEORGE RAJENDRAN SDB | 14 |
| FR. DENCY MUNDUNADACKAL | 14 |
| FR. THOMAS THEKKETHALA CMI | 15 |
| FR. SEBASTIAN POTHENPARAMPIL MST | 19 |
| FR. CHARLES MUNDAKATHIL CMI | 20 |
| FR. JACOB AYAMMATHRA | 22 |

## BISHOP'S ENGAGEMENTS - APRIL 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | 10.00 am | Kaduthuruthy: Visit to Dn. Anoop's Home |
| 2 | Wed | 10.00 am | Bishop's House |
| 3 | Thu | 10.30 am | Vellarada: Holy Qurbana at Kurisumala |
| 4 | Fri | 09.30 am | Bishop's House: Curia Meeting |
| 5 | Sat | 10.00 am | Bishop's House |
| 6 | Sun | 08.00 am | Athencode: Pastoral Visit |
| 7 | Mon | 10.00 am | Bishop's House |
| 8 | Tue | 10.00 am | Bishop's House: Forane Vicars' Meeting |
| 9 | Wed | 10.00 am | Killiyoor : Visit to Dn. Sunil's Home |
| 10 | Thu | 09.30 am | Bishop's House: Meeting Seminarians of Minor & Major Orders |
| 11 | Fri | 10.00 am | Bishop's House: Curia Meeting |
| 12 | Sat | 10.00 am | Pilgrimage to Christ Jubilee Year Pilgrim Centers of the Diocese |
| 13 | Sun | 06.00 am<br>05.00 pm | Mankarai: Palm Sunday<br>Kayathar: Church Blessing |

| | | | |
|---|---|---|---|
| 14 | Mon | 07.00 am<br>09.30 am | Sangamam: Vestition & Minor Orders<br>Sangamam: Meeting with Major Seminarians |
| 15 | Tue | 05.30 pm | Paraicode: Diaconate Ordination |
| 16 | Wed | 10.00 am<br>05.00 pm | Kalluvilai: Recollection for Priests and Religious<br>Thirumoolanagar: Feast day Qurbana |
| 17 | Thu | 06.30 pm | Mekkarai: Maundy Thursday |
| 18 | Fri | 09.00 am | Mukoottukal : Good Friday |
| 19 | Sat | 10.30 pm | Anayadi: Easter Celebrations |
| 20-28 | | | Holy Land Visit: Bishops' meeting at Holy Land |
| 29 | Tue | | Prayer Day |
| 30 | Wed | 09.00 am | Killiyoor: Ordination of Dn. Sunil Antony |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**

| FEASTDAYS OF REV. FATHERS - APRIL 2025 | |
|---|---|
| MAR GEORGE RAJENDRAN SDB | 24 |
| FR. GEORGE KANDATHIL | 24 |
| FR. CHARLES MUNDAKATHIL CMI | 24 |
| FR. GEO CHOOZHIKUNNEL | 24 |
| FR.SINOY PANACKACHALIL MCBS | 24 |
| FR. SUMESH VALLIYAMTHADATHIL | 24 |
| FR. VIVEK KALARITHARA MCBS | 24 |



Catechism Teachers' HMs' Meeting,
March 29, 2025, Kalluvilai



Pastoral Visit,
March 9, 2025, Karode



Pastoral Visit
March 23, 2025, Kazhuvanthittai



Migrants' Meet
16 March, 2025, Bangalore

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop’s House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570